சதுரப் பேரருட் டனிப்பெருந் தலைவனென்
றெதிரற் றோங்கிய வென்னுடைத் தந்தையே

மனவாக் கறியா வரைப்பினி லெனக்கே
இனவாக் கருளிய வென்னுயிர்த் தந்தையே

உணர்ந்துணர்ந் துணரினு முணராப் பெருநிலை
யணைந்திட வெனக்கே யருளிய தந்தையே

துரியவாழ் வுடனே சுகபூ ரணமெனும்
பெரியவாழ் வளித்த பெருந்தனித் தந்தையே

இறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
பேறளித் தாண்ட பெருந்தகைத் தந்தையே 1160

எவ்வகைத் திறத்தினு மெய்துதற் கரிதாம்
அவ்வகை நிலையெனக் களித்தநற் றந்தையே

இனிப்பிற வாநெறி யெனக்களித் தருளிய
தனிப்பெருந் தலைமைத் தந்தையே தந்தையே

பற்றயர்ந் தஞ்சிய பரிவுகண் டணைந்தெனைச்
சற்றுமஞ் சேலெனத் தாங்கிய துணையே

தளர்ந்தவத் தருணமென் றளர்வெலாந் தவிர்த்துட்
கிளர்ந்திட வெனக்குக் கிடைத்தமெய்த் துணையே

துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது வெனவே மொழிந்தமெய்த் துணையே 1170

எங்குறு தீமையு மெனைத்தொட ராவகை
கங்குலும் பகலுமெய்க் காவல்செய் துணையே

வேண்டிய வேண்டிய விருப்பெலா மெனக்கே
யீண்டிருந் தருள்புரி யென்னுயிர்த் துணையே

இகத்தினும் பரத்தினு மெனக்கிடர் சாரா
தகத்தினும் புறத்தினு மமர்ந்தமெய்த் துணையே

அயர்வற வெனக்கே யருட்டுணை யாகியென்
னுயிரினுஞ் சிறந்த வொருமையென் னட்பே


அன்பினிற் கலந்தென தறிவினிற் பயின்றே
இன்பினி லளைந்தவென் னின்னுயிர் நட்பே 1180

நான்புரி வனவெலாந் தான்புரிந் தெனக்கே
வான்பத மளிக்க வாய்த்தநன் னட்பே

உள்ளமு முணர்ச்சியு முயிருங் கலந்துகொண்
டெள்ளுறு நெய்யிலென் னுள்ளுறு நட்பே

செற்றமுந் தீமையுந் தீர்த்துநான் செய்த
குற்றமுங் குணமாக் கொண்டவென் னட்பே

நலவு



குணங்குறி முதலிய குறித்திடா தெனையே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே

பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
கணக்குந் தீர்த்தெனைக் கலந்தநன் னட்பே

சவலைநெஞ் சகத்தின் ணளர்ச்சியு மச்சமும்
கவலையுந் தவிர்த்தெனைக் கலந்தநன் னட்பே

களைப்பறிந் தெடுத்துக் கலக்கந் தவிர்த்தெனக்
கிளைப்பறிந் துதவிய வென்னுயி ருறவே

தன்னைத் தழுவுறு தரஞ்சிறி தறியா
வென்னைத் தழுவிய வென்னுயி ருறவே

மனக்குறை நீக்கிநல் வாழ்வளித் தென்றும்
எனக்குற வாகிய என்னுயி ருறவே

துன்னு மனாதியே சூழ்ந்தெனைப் பிரியா
தென்னுற வாகிய வென்னுயி ருறவே

என்றுமோர் நிலையாய் என்றுமோ ரியலாய்
என்றுமுள் ளதுவா மென்றனிச் சத்தே

அனைத்துல கவைகளு மாங்காங் குணரினும்
இனைத்தென வறியா வென்றனிச் சத்தே

பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுவெனற் கரிதா மென்றனிச் சத்தே

ஆகம முடிகளு மவைபுகல் முடிகளும்
ஏகுதற் கரிதா மென்றனிச் சத்தே

சத்தியஞ் சத்தியஞ் சத்திய மெனவே
இத்தகை வழுத்து மென்றனிச் சத்தே

துரியமுங் கடந்ததோர் பெரியவான் பொருளென
உரைசெய் வேதங்க ளுன்னுமெய்ச் சத்தே

அன்றத னப்பா லதன்பரத் ததுதான்
என்றிட நிறைந்த வென்றனிச் சத்தே

என்றுமுள் ளதுவாய் எங்குமோர் நிறைவாய்
என்றும் விளங்கிடு மென்றனிச் சித்தே

சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கு மென்றனிச் சித்தே

படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளங்கிடு மென்றனிச் சித்தே

மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடு மென்றனிச் சித்தே

உயிர்வகை பலவா யுடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடு மென்றனிச் சித்தே

அறிவவை பலவா யறிவன பலவாய்
எறிவற விளக்கிடு மென்றனிச் சித்தே

நினைவவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடு மென்றனிச் சித்தே 1230

காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடு மென்றனிச் சித்தே

செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடு மென்றனிச் சித்தே

அண்ட சராசர மனைத்தையும் பிறவையும்
எண்டற விளக்கு மென்றனிச் சித்தே

எல்லாம் வல்லசித் தெனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடு மென்றனிச் சித்தே

ஒன்றதி லொன்றென் றுரைக்கவும் படாதாய்
என்றுமோர் படித்தா மென்றனி யின்பே 1240

இதுவது வென்னா வியலுடை யதுவாய்
எதிரற நிறைந்த வென்றனி யின்பே

ஆக்குறு மவத்தைக ளனைத்தையுங் கடந்துமேல்
ஏக்கற நிறைந்த வென்றனி யின்பே

அறிவுக் கறிவினி லதுவது வதுவாய்
எறிவற் றோங்கிய வென்றனி யின்பே

விடய மெவற்றினு மேன்மேல் விளைந்தவை
யிடையிடை யோங்கிய வென்றனி யின்பே

இம்மையு மறுமையு மியம்பிடு மொருமையும்
எம்மையு நிரம்பிடு மென்றனி யின்பே 1250

முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத் தவர்க்குமா மென்றனி யின்பே

எல்லா நிலைகளி னெல்லா வுயிருறும்
எல்லா வின்புமா மென்றனி யின்பே

கரும்புறு சாறுங் கனிந்தமுக் கனியின்
விரும்புறு மிரதமு மிக்கதீம் பாலும்

குணங்கொள் கோற்றேனுங் கூட்டியொன் றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகையுற வியற்றிய

உணவெனப் பல்கா லுரைக்கினு நிகரா
வணமுறு மின்ப மயமே யதுவாய்க்

கலந்தறி வுறுவாய்க் கருதுதற் கரிதாய்
நலந்தரு விளக்கமு நவிலருந் தண்மையும்

உள்ளதா யென்று முள்ளதா யென்னுள்
உள்ளதா யென்ற னுயிருள முடம்புடன்

எல்லா மினிப்ப வியலுறு சுவையளித்
தெல்லாம் வல்லசித் தியற்கைய தாகிச்

சாகா வரமுந் தனித்தபே ரறிவும்
மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்

செயற்கரு மனந்த சித்தியு மின்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகிப்

பூரண வடிவாய்ப் பொங்கிமேற் றதும்பி
ஆரண முடியுட னாகம முடியுங்

கடந்தென தறிவாங் கனமேற் சபைநடு
நடந்திகழ் கின்றமெய்ஞ் ஞானவா ரமுதே

சத்திய வமுதே தனித்திரு வமுதே
நித்திய வமுதே நிறைசிவ வமுதே

சச்சிதா னந்தத் தனிமுத லமுதே
மெய்ச்சிதா காச விளைவரு ளமுதே

ஆனந்த வமுதே யருளொளி யமுதே
தானந்த மில்லாத் தத்துவ வமுதே

நவநிலை தருமோர் நல்லதெள் ளமுதே
சிவநிலை தனிலே திரண்டவுள் ளமுதே

பொய்படாக் கருணைப் புண்ணிய வமுதே
கைபடாப் பெருஞ்சீர்க் கடவுள்வா னமுதே

அகம்புற மகப்புற மாகிய புறப்புறம்
உகந்தநான் கிடத்து மோங்கிய வமுதே

பனிமுத னீக்கிய பரம்பர வமுதே
தனிமுத லாய சிதம்பர வமுதே

உலகெலாங் கொள்ளினு முலப்பிலா வமுதே
அலகிலாப் பெருந்திற லற்புத வமுதே 1290

அண்டமு மதன்மே லண்டமு மவற்றுள
பண்டமுங் காட்டிய பரம்பர மணியே

பிண்டமு மதிலுறு பிண்டமு மவற்றுள
பண்டமுங் காட்டிய பராபர மணியே

நினைத்தவை நினைத்தவை நினைத்தாங் கெய்துற
அனைத்தையுந் தருமோ ரரும்பெறன் மணியே

விண்பத மனைத்து மேற்பத முழுவதுங்
கண்பெற நடத்துங் ககனமா மணியே

பார்பத மனைத்தும் பகரடி முழுவதுஞ்
சார்புற நடத்துஞ் சரவொளி மணியே 1300

அண்டகோ டிகளெலா மரைக்கணத் தேகிக்
கண்டுகொண் டிடவொளிர் கலைநிறை மணியே

சராசர வுயிர்தொறுஞ் சாற்றிய பொருடொறும்
விராவியுள் விளங்கும் வித்தக மணியே

மூவரு முனிவரு முத்தருஞ் சித்தருந்
தேவரு மதிக்குஞ் சித்திசெய் மணியே

தாழ்வெலாந் தவிர்த்துச் சகமிசை யழியா
வாழ்வெனக் களித்த வளரொளி மணியே

நவமணி முதலிய நலமெலாந் தருமொரு
சிவமணி யெனுமருட் செல்வமா மணியே 1310

வான்பெறற் கரிய வகையெலாம் விரைந்து
நான்பெற வளித்த நாதமந் திரமே

கற்பம் பலபல கழியினு மழியாப்
பொற்புற வளித்த புனிதமந் திரமே

அகரமு முகரமு மழியாச் சிகரமும்
வகரமு மாகிய வாய்மைமந் திரமே

ஐந்தென வெட்டென வாறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியுமந் திரமே

வேதமு மாகம விரிவுக ளனைத்தும்
ஓதநின் றுலவா தோங்குமந் திரமே 1320

உடற்பிணி யனைத்தையு முயிர்ப்பிணி யனைத்தையு
மடர்ப்பறத் தவிர்த்த வருட்சிவ மருந்தே

சித்திக்கு மூலமாஞ் சிவமருந் தெனவுளந்
தித்திக்கு ஞானத் திருவருண் மருந்தே

இறந்தவ ரெல்லா மெழுந்திடப் புரியுஞ்
சிறந்தவல் லபமுறு திருவருண் மருந்தே

மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே

நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும்
உரைதரு பெருஞ்சீ ருடையநன் மருந்தே

என்றே யென்னினு மிளமையோ டிருக்க
நன்றே தருமொரு ஞானமா மருந்தே

மலப்பிணி தவிர்த்தருள் வலந்தரு கின்றதோர்
நலத்தகை யதுவென நாட்டிய மருந்தே

சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனு மானந்த மருந்தே

இடையுறப் படாத வியற்கை விளக்கமாய்த்
தடையொன்று மில்லாத் தகவுடை யதுவாய்

மாற்றிவை யென்ன மதித்தளப் பரிதாய்
ஊற்றமும் வண்ணமு மொருங்குடை யதுவாய்க்

காட்சிக் கினியநற் கலையுடை யதுவாய்
ஆட்சிக் குரியபன் மாட்சியு முடைத்தாய்

கைதவர் கனவினுங் காண்டற் கரிதாய்ச்
செய்தவப் பயனாந் திருவருள் வலத்தால்

உளம்பெறு மிடமெலா முதவுக வெனவே
வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே

புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்
வடம்படா நலமும் வாய்த்தசெம் பொன்னே

மும்மையுந் தருமொரு செம்மையை யுடைத்தாய்
இம்மையே கிடைத்திங் கிலங்கிய பொன்னே

எடுத்தெடுத் துதவினு மென்றுங் குறையா
தடுத்தடுத் தோங்குமெய் யருளுடைப் பொன்னே

தளர்ந்திடே லெடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
கிளர்ந்திட வுரைத்துக் கிடைத்தசெம் பொன்னே

எண்ணிய தோறு மியற்றுக வென்றெனை
யண்ணியென் கரத்தி லமர்ந்தபைம் பொன்னே

நீகேண் மறக்கினு நின்னையாம் விட்டுப்
போகே மெனவெனைப் பொருந்திய பொன்னே

எண்ணிய வெண்ணியாங் கெய்திட வெனக்குப்
பண்ணிய தவத்தாற் பழுத்தசெம் பொன்னே

விண்ணியற் றலைவரும் வியந்திட வெனக்குப்
புண்ணியப் பயனாற் பூத்தசெம் பொன்னே

நால்வகை நெறியினு நாட்டுக வெனவே
பால்வகை முழுதும் பணித்தபைம் பொன்னே

எழுவகை நெறியினு மியற்றுக வெனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே

எண்ணிய படியெலா மியற்றுக வென்றெனைப்
புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே

ஊழிதோ றூழி யுலப்புறா தோங்கி
வாழியென் றெனக்கு வாய்த்தநன் னிதியே

இதமுற வூழிதோ றெடுத்தெடுத் துலகோர்க்
குதவினு முலவா தோங்குநன் னிதியே

இருநிதி யெழுநிதி யியனவ நிதிமுதற்
றிருநிதி யெல்லாந் தருமொரு நிதியே

எவ்வகை நிதிகளு மிந்தமா நிதியிடை
அவ்வகை கிடைக்குமென் றருளிய நிதியே

அற்புதம் விளங்கு மருட்பெரு நிதியே
கற்பனை கடந்த கருணைமா நிதியே

நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே

பளகிலா தோங்கும் பளிக்குமா மலையே
வளமெலா நிறைந்த மாணிக்க மலையே

மதியுற விளங்கு மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே

உரைமனங் கடந்தாங் கோங்குபொன் மலையே
துரியமேல் வெளியிற் ஜோதிமா மலையே

புற்புதந் திரைநுரை புரைமுத லிலதோர்
அற்புதக் கடலே யமுதத்தண் கடலே

இருட்கலை தவிர்த்தொளி யெல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே யானந்தக் கடலே

பவக்கடல் கடந்துநான் பார்த்தபோ தருகே
உவப்புறு வளங்கொண் டோங்கிய கரையே

என்றுயர்ச் சோடைக ளெல்லாந் தவிர்த்துள
நன்றுற விளங்கிய நந்தனக் காவே

சேற்றுநீ ரின்றிநற் றீஞ்சுவை தருமோர்
ஊற்றுநீர் நிரம்ப வுடையயூந் தடமே

கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே

களைப்பறக் கிடைத்த கருணைநன் னீரே
இளைப்பற வாய்த்த வின்சுவை யுணவே 1400

தென்னைவாய்க் கிடைத்த செவ்விள னீரே
தென்னைவான் பலத்திற் றிருகுதீம் பாலே

நீர்நசை தவிர்க்கு நெல்லியங் கனியே
வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே

கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்டநற் சுவைசெய் யிலந்தையங் கனியே

புனிதவான் றருவிற் புதுமையாம் பலமே
கனியெலாங் கூட்டிக் கலந்ததீஞ் சுவையே

இதந்தரு கரும்பி லெடுத்ததீஞ் சாறே
பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே 1410

சாலவே யினிக்குஞ் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக் கினியகற் கண்டே

உலப்புறா தினிக்கு முயர்மலைத் தேனே
கலப்புறா மதுரங் கனிந்தகோற் றேனே

நவையிலா தெனக்கு நண்ணிய நறவே
சுவையெலாந் திரட்டிய தூயதீம் பதமே

பதம்பெறக் காய்ச்சிய பசுநறும் பாலே
இதம்பெற வுருக்கிய விளம்பசு நெய்யே

உலர்ந்திடா தென்று மொருபடித் தாகி
மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே 1420

இகந்தரு புவிமுத லெவ்வுல குயிர்களும்
உகந்திட மணக்குஞ் சுகந்தநன் மணமே

யாழுறு மிசையே யினியவின் னிசையே
ஏழுறு மிசையே யியலரு ளிசையே

திவளொளிப் பருவஞ் சேர்ந்தநல் லவளே
அவளொடுங் கூடி யடைந்ததோர் சுகமே

தமிழ்

நாதநல் வரைப்பி னண்ணிய பாட்டே
வேதகீ தத்தில் விளைதிருப் பாட்டே

நன்மார்க்கர் நாவி னவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கந் தழுவிய பாட்டே

நம்புறு மாகம நவிற்றிய பாட்டே
எம்பல மாகிய வம்பலப் பாட்டே

என்மனக் கண்ணே என்னருட் கண்ணே
என்னிரு கண்ணே யென்கணுண் மணியே

என்பெருங் களிப்பே யென்பெரும் பொருளே
என்பெருந் திறலே யென்பெருஞ் செயலே

என்பெருந் தவமே என்றவப் பலனே
என்பெருஞ் சுகமே யென்பெரும் பேறே

என்பெரு வாழ்வே யென்றன்வாழ் முதலே
என்பெரு வழக்கே யென்பெருங் கணக்கே

என்பெரு நலமே யென்பெருங் குலமே
என்பெரு வலமே யென்பெரும் புலமே

என்பெரு வரமே யென்பெருந் தரமே
என்பெரு நெறியே யென்பெரு நிலையே

என்பெருங் குணமே என்பெருங் கருத்தே
என்பெருந் தயவே யென்பெருங் கதியே

என்பெரும் பதியே யென்னுயி ரியலே
என்பெரு நிறைவே யென்றனி யறிவே

தோலெலாங் குழைந்திடச் சூழ்நரம் பனைத்தும்
மேலெலாங் கட்டவை விட்டுவிட் டியங்கிட

என்பெலா நெக்குநெக் கியலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலா மெய்யுறத் தளர்ந்திட

இரத்த மனைத்துமுள் ளிறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித் தொருதிர ளாயிட

மடலெலா மூளை மலர்ந்திட வமுதம்
உடலெலா மூற்றெடுத் தோடி நிரம்பிட

ஒண்ணுதல் வியர்த்திட வொளிமுக மலர்ந்திட
தண்ணிய வுயிர்ப்பினிற் சாந்தந் ததும்பிட

உண்ணகை தோற்றிட வுரோமம் பொடித்திடக்
கண்ணினீர் பெருகிக் கால்வழிந் தோடிட

தயரை

நேதாரல்வாரையினாலனியமாகவே
வேதிகைமேல்வினை தீர்ப்போகை வே
சன்மார்க்கர்க்காவினாவிலையமாகவே
சன்மார்க்கசங்கத்தழகிலை யாகவே
சங்கற்புயமாகமாணிக்கிலை யாகவே
எல்லையிலாதிலை வடிவமாகவே
எனன்னைக்கண்ணேஎன்னாத்மாக்களேஎன்
எனன்னிதயமேயென்னுயிரின்னமுதமே
எனன்பெருவாழ்வேயென்னுடைமைபொருளே
எனன்பெருவாழ்வேயென்னுரிமைபெருமை
எனன்பெருவாழ்வேயென்னுடைமைபெருமை

வாய்துடித் தலறிட வளர்செவித் துணைகளிற்
கூயிசைப் பொறியெலாங் கும்மெனக் கொட்டிட

மெய்யெலாங் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாங் குவிந்திடக் காலெலாஞ் சுலவிட

மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்த மியைந்து களித்திட

அகங்கார மாங்காங் கதிகரிப் பமைந்திடச்
சகங்காண வுள்ளந் தழைத்து மலர்ந்திட

அறிவுரு வனைத்து மானந்த மாயிடப்
பொறியுறு மான்மதற் போதமும் போயிடத்

தத்துவ மனைத்துந் தாமொருங் கொழிந்திடச்
சத்துவ மொன்றே தனித்துநின் றோங்கிட

உலகெலாம் விடய முளவெலா மறைந்திட
அலகிலா வருளி னாசைமேற் பொங்கிட

என்னுளத் தெழுந்துயி ரெல்லா மலர்ந்திட
என்னுளத் தோங்கிய என்றனி யன்பே

பொன்னடி கண்டருட் புத்தமு துணவே
என்னுளத் தெழுந்த வென்னுடை யன்பே

தன்னையே யெனக்குத் தந்தரு ளொளியால்
என்னைவே தித்த என்றனி யன்பே

என்னுளே யரும்பி யென்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை யன்பே

என்னுளே விளங்கி யென்னுளே பழுத்து
என்னுளே கனிந்த வென்னுடை யன்பே

தன்னுளே நிறைவுறு தரமெலா மளித்தே
என்னுளே நிறைந்த என்றனி யன்பே

துன்புள வனைத்துந் தொலைத்தென துருவை
யின்புரு வாக்கிய என்னுடை யன்பே

பொன்னுடம் பெனக்குப் பொருந்திடும் பொருட்டா
என்னுளங் கலந்த என்றனி யன்பே

தன்வச மாகித் ததும்பிமேற் பொங்கி
என்வசங் கடந்த என்னுடை யன்பே

தன்னுளே பொங்கிய தண்ணமு துணவே
என்னுளே பொங்கிய என்றனி யன்பே

அருளொளி விளங்கிட வாணவ மெனுமோர்
இருளற வென்னுளத் தேற்றிய விளக்கே

துன்புறு தத்துவத் துரிசெலா நீக்கிநல்
லின்புற வென்னுளத் தேற்றிய விளக்கே

மயலற வழியா வாழ்வுமேன் மேலும்
இயலுற வென்னுளத் தேற்றிய விளக்கே 1500

இடுவெளி யனைத்து மியலொளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே

கருவெளி யனைத்துங் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே யொளிர்தரு விளக்கே

தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான வியலொளி விளக்கே

ஆகம முடிமே லருளொளி விளங்கிட
வேகம தறவே விளங்கொளி விளக்கே

ஆரியர் வழுத்திய வருணிலை யனாதி
காரியம் விளக்குமோர் காரண விளக்கே 1510

தண்ணிய வமுதே தந்தென துளத்தே
புண்ணியம் பலித்த பூரண மதியே

உய்தர வமுத முதவியென் னுளத்தே
செய்தவம் பலித்த திருவளர் மதியே

பதியெலாந் தழைக்கப் பதம்பெறு மமுத
நிதியெலா மளித்த நிறைதிரு மதியே

பாலெனத் தண்கதிர் பரப்பியெஞ் ஞான்று
மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

உயங்கிய வுள்ளமு முயிருந் தழைத்திட
வயங்கிய கருணை மழைபொழி மழையே 1520

என்னையும் பணிகொண் டென்னுளே நிரம்ப
மன்னிய கருணை மழைபொழி மழையே

உளங்கொளு மெனக்கே யுவகைமேற் பொங்கி
வளங்கொளக் கருணை மழைபொழி மழையே

நலந்தர வுடலுயிர் நல்லறி வெனக்கே
மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே

தூய்மையா லெனது துரிசெலா நீக்கிநல்
வாய்மையாற் கருணை மழைபொழி மழையே

ഇരുട്ടിൽ നിന്നും വെളിച്ചത്തിലേക്ക് നടന്നു കയറുന്നതുപോലെ ഒരു അനുഭവമാണ് ഓരോ പുതിയ പുസ്തകവും വായനക്കാരന് നൽകുന്നത്. ഓരോ പുതിയ പുസ്തകവും വായനക്കാരന്റെ ഉള്ളിൽ ഒരു പുതിയ ലോകം തുറന്നിടുന്നു

வெம்மல விரவது விடிதரு ணந்தனிற்
செம்மையி லுதித்துளந் திகழ்ந்தசெஞ் சுடரே

திரையெலாந் தவிர்த்துச் செவ்வியுற் றாங்கே
வரையெலாம் விளங்க வயங்குசெஞ் சுடரே

அலகிலாத் தலைவர்க ளரசுசெய் தத்துவ
உலகெலாம் விளங்க வோங்குசெஞ் சுடரே

முன்னுறு மலவிருள் முழுவது நீக்கியே
என்னுள வரைமே லெழுந்தசெஞ் சுடரே

ஆதியு நடுவுட னந்தமுங் கடந்த
ஜோதியா யென்னுளஞ் சூழ்ந்தமெய்ச் சுடரே

உள்ளொளி யோங்கிட வுயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட் கனலே

நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித் தெழுந்து வளர்ந்தமெய்க் கனலே

வேதமு மாகம விரிவும் பரம்பர
நாதமுங் கடந்த ஞானமெய்க் கனலே

எண்ணிய வெண்ணிய வெல்லாந் தரவெனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே

வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
நலமெலா மளித்த ஞானமெய்க் கனலே

இரவொடு பகலிலா வியல்பொது நடமிடு
பரமவே தாந்தப் பரம்பரஞ் சுடரே

வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
பரமசித் தாந்தப் பதிபரஞ் சுடரே

சமரச சத்தியச் சபையி னடம்புரி
சமரச சத்தியத் தற்சுயஞ் சுடரே

சபையென துளமெனத் தானமர்ந் தெனக்கே
அபய மளித்ததோ ரருட்பெருஞ் ஜோதி

மருளெலாந் தவிர்த்து வரமெலாங் கொடுத்தே
அருளமு தருத்திய வருட்பெருஞ் ஜோதி

வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழியொன் றளித்த வருட்பெருஞ் ஜோதி

என்னையும் பொருளென வெண்ணியென் னுளத்தே
அன்னையு மப்பனு மாகிவீற் றிருந்து

உலகியல் சிறிது முளம்பிடி யாவகை
அலகில்பே ரருளா லறிவது விளக்கிச்

சிறுநெறி செல்லாத் திறனளித் தழியா
துறுநெறி யுணர்ச்சிதந் தொளியுறப் புரிந்து

சாகாக் கல்வியின் றரமெலா முணர்த்திச்
சாகா வரத்தையுந் தந்துமேன் மேலும்

அன்பையும் விளைவித் தருட்பே ரொளியால்
இன்பையு நிறைவித் தென்னையு நின்னையும் 1570

ஓருரு வாக்கியா னுன்னிய படியெலாஞ்
சீருறச் செய்துயிர்த் திறம்பெற வழியா

அருளமு தளித்தனை யருணிலை யேற்றினை
அருளறி வளித்தனை யருட்பெருஞ் ஜோதி

வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய வருட்பெருஞ் ஜோதி

உலகுயிர்த் திரளெலா மொளிநெறி பெற்றிட
இலகுமைந் தொழிலையும் யான்செயத் தந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய வருட்பெருஞ் ஜோதி 1580

மூவருந் தேவரு முத்தருஞ் சித்தரும்
யாவரும் பெற்றிடா வியலெனக் களித்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய வருட்பெருஞ் ஜோதி

சித்திக ளனைத்தையுந் தெளிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினிற் றந்தனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய வருட்பெருஞ் ஜோதி

உலகினி லுயிர்களுக் குறுமிடை யூறெலாம்
விலகநீ யடைந்து விலக்குக மகிழ்க 1590

சுத்தசன் மார்க்க சுகநிலை பெறுக
உத்தம னாகுக வோங்குக வென்றனை

போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலி னோங்கிய வருட்பெருஞ் ஜோதி

அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி யருட்பெருஞ் ஜோதி 1596

திருச்சிற்றம்பலம்.

~ தொடர்

உலகிலுள்ள முழுமையான வலைத்
தளங்களில் மிகவும் பிரபலமான
தமிழ் இணைய இதழ்

திருவளர்பே ரருளுடையான் சிற்சபையா னெல்லாஞ்
செய்யவல்ல தனித்தலைமைச் சித்தனெல்லா முடையான்
உருவமுமா யுருவமுமா யுபயமுமா யலவாய்
ஓங்குமருட் பெருஞ்ஜோதி யொருவனுண்டே யவன்றான்
பெருமையினா லெனையீன்றா னானொருவன் றானே
பிள்ளையவன் பிள்ளையெனப் பெரியரெலா மறிவார்
இருமையுறு தத்துவர்கா ளென்னையறி யீரோ
யிங்குமது துள்ளலெலா மேதுநட வாதே. 1

மனமெனுமோர் பேய்க்குரங்கு மடைப்பயலே நீதான்
மற்றவர்போ லெனைநினைத்து மருட்டாதே கண்டாய்
இனமுறவென் சொல்வழியே யிருத்தியெனிற் சுகமா
இருந்திடுநீ யென்சொல்வழி யேற்றிலையா னாலோ
தினையளவுன் னதிகாரஞ் செல்லவொட்டே னுலகஞ்
சிரிக்கவுனை யடக்கிடுவேன் றிருவருளாற் கணத்தே
நனவிலெனை யறியாயோ யாரெனவிங் கிருந்தாய்
ஞானசபைத் தலைவனுக்கு நல்லபிள்ளை நானே. 2

பன்முகஞ்சேர் மனமெனுமோர் பரியாசப் பயலே
பதையாதே சிதையாதே பார்க்குமிட மெல்லாம்
கொன்முகங்கொண் டடிக்கடிபோய்க் குதியாதே யெனது
குறிப்பின்வழி நின்றிடுநின் குதிப்புநட வாது
என்முனமோர் புன்முனைமே லிருந்தபனித் துளிநீ
இம்மெனுமுன் னடக்கிடுவே னென்னையறி யாயோ
பின்முனென நினையேல்காண் சிற்சபையில் நடிக்கும்
பெரியதனித் தலைவனுக்குப் பெரியபிள்ளை நானே. 3

விரிந்தமன மெனுஞ்சிறிய விளையாட்டுப் பயலே
விரிந்துவிரிந் தலையாதே மெலியாதே விடயம்
புரிந்தநெறி புரிந்தவமே போகாதே பொறிவாய்ப்
புரையாதே விரையாதே புகுந்துமயங் காதே
தெரிந்துதெளிந் தொருநிலையிற் சித்திரம்போ லிருநீ
சிறிதசைந்தா லக்கணமே சிதைத்திடுவேன் கண்டாய்
பரிந்தெனைநீ யாரென்று பார்த்தாய்சிற் சபைவாழ்
பதிதனக்கே யருட்பட்டம் பலித்தபிள்ளை நானே. 4

தீரவள்ர்வேமதுடையவர்ள்ச்சையாலை
ள்ளாது செய்யவலவிக்கவிலைக்கிதுத
னேல்லாமுடையவர்ள்ஏவகுமையவுமை
யுபயகுமையவர்ய் தெர்ந்துகுடனேர்ஞை
தீயொருவருள்ளேயவர்ள்ளர்-தெருமையை
வெளியிர்ளாரெருவர்ள்ளநேயிர்வரையை
ர்ப்பிர்வரையெளபெரியரேவாமுவ
ரோயிவர்ளுக்கர்ப்பிவர்ர்ளரெளர்வளைப்பி

மனதுடனேர்வேய்ர்ப்தவருகுடனேயவேதிர்
ஷ்வர்வேரெளர்வேய்ர்ப்தவருகுடனேயவேதிர்
தினகேளெர்ஷ்ஷெல்வதிபெயிரக்கிலெளர்ஷ்ஷ்ஷ்
திரக்கிகேளெள்ஷ்ஷெல்வதிபேஷ்ஷ்ஷிலெயாளரெ
னீவாயளரள்ளுளிவாரஞ்ஷெல்லவெளரேஷ்ஷெலவஞ்
திர்வரஞ்வாயடரகிரவேள்கிரவநமதஷ்ளஞ்ஷ்ஷ
னைவிலெவாளயஷ்ளையரேயாளரொளரிரிதரோய்
ரொனகளடரவிலையர்ர்ள்ல்லிவர்ளரொ

மள்ளுவர்ஞ்ஷேள்ளவெலேரோள்பரியாகவரவ ரே
வரைவாஞ்ஷ்ஷிலையாகேயாவர்ரகுலிடரேலெள
ரொள்ளுவள்ரொள்ளட்டவர்ஞ்ஷேலிர்ரவர்ர்ளரெளர்
ர்ஷ்பிர்வரஞ்ஷிரள்ஞ்ஷ்ஷிரிள்ர்ஞ்ஷ்ஷ்பரிவரை
ரொள்ளுளை ரொள்ர்ஞ்ஷவளவேலிர்ரவரள்ர்ளரெளர்
ஞ்ஷ்ஷ்ஷெளரிவளை ர்ஞ்ஷ்ஷிரேளரொளரிரிதரோய்
பிள்ளுளெளரிவளை ரேய்ர்ளரெள்ஷ்ஷ்ஷ்ஷிரிவரை
ரெளர்ஷ்ளரெள்ர்ஞ்ஷ்ஷ்ஷ

பாய்மனமென் றுரைத்திடுமோர் பராய்முருட்டுப் பயலே
பல்பொறியாம் படுக்காளிப் பயல்களொடுங் கூடி
சேய்மையினு மண்மையினுந் திரிந்தோடி யாடித்
தியங்காதே யொருவார்த்தை திருவார்த்தை யெனவே
ஆய்வுறக்கொண் டடங்குகநீ யடங்கிலையே லுனைத்தான்
அடியொடுவே ரறுத்திடுவே னாணையரு ளாணை
பேய்மதியா நீயெனைத்தா னறியாயோ வெல்லாம்
பெற்றவன்தன் செல்வாக்குப் பெற்றபிள்ளை நானே. 5

மயங்குபுத்தி யெனுமுலக வழக்காளிப் பயலே
வழிதுறையீ தென்றறியாய் வகைசிறிது மறியாய்
உயங்கிவிசா ரித்திடவே யோடுகின்றா யுணரும்
உளவறியாய் வீணுழைப்பிங் குழைப்பதிலென் பயனோ
வயங்குமன மடங்கியவா றடங்குகநீ யிலையேல்
மடித்திடுவேன் கணத்திலுனை வாய்மையிது கண்டாய்
இயங்கவென்னை யறியாயோ யாரெனவெண் ணினையோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே. 6

கலையறியாச் சித்தமெனுங் கனமோசப் பயலே
காலறியாய் தலையறியாய் காண்பன கண்டறியாய்
நிலையறியாய் ஒன்றையொன்றா நிச்சயித்திவ் வுலகை
நெறிமயங்க மயக்குகின்றாய் நீயோவிங் குறுவாய்
அலையறியாக் கடல்போலே யசைவற நின்றிடுநீ
அசைவாயே லரைக்கணத்தே யடக்கிடுவே னுனைத்தான்
அலைவறியா யென்றனைநீ யறியாயோ நான்றான்
ஆண்டவன்றன் றாண்டவங்கண் டமர்ந்தபிள்ளை காணே. 7


அகங்கார மெனும்பொல்லா அடவாதிப் பயலே
அடுக்கடுக்கா யெடுக்கின்றா யடுத்துமுடுக் கின்றாய்
செகங்காணத் தலைகாலுந் தெரியாம லலைந்து
திரிகின்றாய் நின்செபந்தான் சிறிதுநட வாது
இகங்காண வடங்குகநீ யடங்காயேற் கணத்தே
இருந்தவிடந் தெரியாதே யெரிந்திடச்செய் திடுவேன்
சுகங்காண வென்றனைநீ யறியாயோ நான்றான்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றபிள்ளை காணே. 8

மானெனுமோர் ஜகஜாலச் சிறுக்கியிது கேளுன்
வஞ்சகக்கூத் தெல்லாமோர் மூட்டையெனக் கட்டி
ஈனமுற நின்றலைமே லேற்றெடுத்துக் கொண்டுன்
னேவல்புரி பெண்களொடே யிவ்விடம்விட் டேகி
கானடைந்து கருத்தடங்கிப் பிழைத்திடுநீ யிலையேல்
கணத்திலுனை மாய்ப்பேனுன் கணத்தினொடு கண்டாய்
ஏனெனைநீ யறியாயோ சிற்சபையில் நடஞ்செய்
இறைவனருட் பெருஞ்ஜோதிக் கினியபிள்ளை நானே. 9

மாயையெனும் படுதிருட்டுச் சிறுக்கியிது கேளுன்
மாயையெலாஞ் சுமைசுமையா வரிந்துகட்டிக் கொண்டுன்
சாயையெனும் பெண்ணினத்தார் தலைமேலு முனது
தலைமேலுஞ் சுமந்துகொண்டோர் சந்துவழி பார்த்தே
பேயெனக்காட் டிடையோடிப் பிழைத்திடுநீ யிலையேல்
பேசுமுன்னே மாய்த்திடுவேன் பின்னுமுன்னும் பாரேன்
ஆயெனைநீ யறியாயோ வெல்லாஞ்செய் வல்லார்
அருளமுதுண் டருணிலைமே லமர்ந்தபிள்ளை நானே. 10

மாமாயை யெனும்பெரிய வஞ்சகிநீ யிதுகேள்
வரைந்தவுன்றன் பரிசனப்பெண் வகைதொகைக ளுடனே
போமாறுன் செயலனைத்தும் பூரணமாக் கொண்டு
போனவழி தெரியாதே போய்ப்பிழைநீ யிலையேல்
சாமாறுன் றனையின்றே சாய்த்திடுவே னிதுதான்
சத்தியமென் றெண்ணுதியென் றன்னையறி யாயோ
ஆமாறு சிற்சபையி லருணடனம் புரிவார்
அருளமுதுண் டருணிலைமே லமர்ந்தபிள்ளை நானே. 11

கன்மமெனும் பெருஞ்சிலுகுக் கடுங்கலகப் பயலே
கங்குகரை காணாத கடல்போலே வினைகள்
நன்மையொடு தீமையெனப் பலவிகற்பங் காட்டி
நடத்தினைநின் னடத்தையெலாஞ் சிறிது நடவாது
என்முனிருந் தனையெனினீ யழிந்திடுவா யதனால்
இக்கணத்தே நின்னினத்தோ டேகுகநீ யிலையேல்
இன்மையுற மாய்த்திடுவே னென்னையறி யாயோ
எல்லாஞ்செய் வல்லவனுக் கினியபிள்ளை நானே. 12



எத்துணையுங் காட்டாத வாணவமென் றிடுமோர்
இருட்டறைக்கோ ரதிகாரிக் குருட்டுமுடப் பயலே
இத்தனைநாள் பிடித்ததுனைக் கண்டுதுரத் திடவே
இன்னுமரைக் கணந்தரியே னிக்கணத்தே நினது
பொத்தியசுற் றத்துடனே போய்விடுதி யிலையேல்
பூரணமெய் யருளொளியாற் பொன்றுவிப்பே னினையே
சத்தியஞ்சொன் னேனெனைநீ யறியாயோ ஞான
சபைத்தலைவன் றருதலைமைத் தனிப்பிள்ளை நானே. 13

பெருமாயை யென்னுமொரு பெண்பிள்ளை நீதான்
பெற்றவுடம் பிதுசாகாச் சுத்தவுடம் பாக்கி
ஒருஞானத் திருவமுதுண் டோங்குகின்றே னினிநின்
உபகரிப்போ ரணுத்துணையு முளத்திடைநான் விரும்பேன்
அருளாய ஜோதியெனக் குபகரிக்கின் றதுநீ
அறியாயோ வென்னளவி லமைகவய லமர்க
தெருளாய வுலகிடையென் சரிதமுணர்ந் திலையோ
சிற்சபையென் னப்பனுக்குச் சிறந்தபிள்ளை நானே. 14

பேசுதீரோ தாயியெனும் பெண்மடவா யிதுகேள்
பின்முன்னறி யாதெனைநீ யென்முன்மறைக் காதே
வேசரமா மலவிரவு முழுதும்விடிந் ததுகாண்
வீசுமருட் பெருஞ்ஜோதி விளங்குகின்ற தறிநீ
ஏசுறுநின் செயலனைத்து மென்னளவில் நடவா
திதையறிந்து விரைந்தெனைவிட் டேகுகவிக் கணத்தே
மாசறுமென் சரிதமொன்றுந் தெரிந்திலையோ யெல்லாம்
வல்லவொரு சித்தருக்கே நல்லபிள்ளை நானே. 15

தூக்கமெனுங் கடைப்பயலே சோம்பேறி யிதுகேள்
துணிந்துனது சுற்றமொடு சொல்லுமரைக் கணத்தே
தணிந்தபெருங் காட்டகத்தே யேகுகநீ யிருந்தால்
தப்பாதுன் றலைபோகுஞ் சத்தியமீ தறிவாய்
ஏக்கமெலாந் தவிர்ந்துவிட்டே னாக்கமெலாம் பெற்றேன்
இன்பமுறு கின்றேனீ யென்னையடை யாதே
போக்கில் விரைந்தோடுகநீ பொற்சபைசிற் சபைவாழ்
பூரணர்க்கிங் கன்பான பொருளனென வறிந்தே. 16

பயமெனுமோர் கொடும்பாவிப் பயலேநீ யிதுகேள்
பற்றறவென் றனைவிடுத்துப் பனிக்கடல்வீழ்ந் தொளிப்பாய்
தயவினுரைத் தேனின்னு மிருத்தியெனி லுனது
தன்றலைக்குத் தீம்புவருந் தலைமட்டோ நினது
செயலுறுமுள் ளுடம்பழியுஞ் சுற்றமெலா மிறக்குந்
தீர்ந்ததினி யில்லையென்றே திருவார்த்தை பிறக்கும்
அயலிடைநேர்ந் தோடுகநீ யென்னையறி யாயோ
அம்பலத்தென் னப்பனருள் நம்புபிள்ளை நானே. 17

கோபமெனும் புலைப்பயலே காமவலைப் பயலே
கொடுமோகக் கடைப்பயலே குறும்புமதப் பயலே
தாபவுலோ பப்பயலே மார்ச்சரியப் பயலே
தயவுடனிங் கிசைக்கின்றேன் றாழ்த்திருக்கா தீர்காண்
தீபமெலாங் கடந்திருள்சேர் நிலஞ்சாரப் போவீர்
சிறிதுபொழு திருந்தாலுந் திண்ணமிங்கே யழிவீர்
சாபமுறா முன்னமறிந் தோடுமினோ வென்னைத்
தானறியீர் தனித்தலைவன் றலைப்பிள்ளை நானே. 18

பசிமெனுமோர் பெரும்பாவிப் பயலேதுன் பெனுமோர்
படுபாவிப் பயலேயா பத்தெனும்பொய்ப் பயலே
வசியவத்தைக் கடைப்பயலே தடைப்பயலே யிட்ராம்
வன்பயலே நீவிரெலா மென்புடைநில் லாதீர்
நசியவுமக் குளமுளதோ விக்கணத்தே நீவீர்
நடந்துவிரைந் தோடுமினோ நாடறியா வனத்தே
கசியுமனத் தெனையறியீர் சிற்சபையில் விளங்குங்
கடவுள்மகிழ்ந் தளித்ததனிக் கதிர்ப்பிள்ளை நானே. 19

மரணமெனும் பெருந்திருட்டு மாபாவிப் பயலே
வையகமும் வானகமு மற்றகமுங் கடந்தே
பரணமுறு பேரிருட்டுப் பெருநிலமுந் தாண்டிப்
பசையறநீ யொழிந்திடுக விங்கிருந்தா யெனிலோ
இரணமுற வுனைமுழுது மடித்திடுவே னிதுதான்
என்னுடையா னருளாணை யென்குருமே லாணை
அரணுறுமென் றனைவிடுத்தே யோடுகநீ நான்றான்
அருட்பெருஞ் ஜோதிப்பதியை யடைந்தபிள்ளை காணே. 20

அருளளித்தா னன்பளித்தா னம்பலத்தா னுண்மைப்
பொருளளித்தா னென்னுட் புணர்ந்தான் – தெருளளித்தான்
எச்சோ தனையு மியற்றாம லாண்டுகொண்டான்
அச்சோ வெனக்கவன்போ லார். 1

ஆரணமு மாகமமு மாங்காங் குணர்த்துகின்ற
காரணமுங் காரியமுங் காட்டுவித்தான் – பூரண்சிற்
றம்பலத்தா னென்னாசை யப்ப னெலாம்வல்ல
செம்பலத்தை யென்னுளத்தே சேர்த்து. 2

சேர்த்தான் பதமென் சிரத்தே திருவருட்கண்
பார்த்தானென் னெண்ணமெலாம் பாலித்தான் – தீர்த்தானென்
துன்பமெலாந் தூக்கமெலாஞ் சூழாது நீக்கிவிட்டான்
இன்பமெலாந் தந்தா னிசைந்து. 3

இசைந்தா னென்னுள்ளத் திருந்தா னெனையு
நசைந்தா னென்பாட்டை நயந்தான் – அசைந்தாடு
மாயை மனமடக்கி வைத்தா னருளெனுமென்
றாயைமகி ழம்பலவன் றான். 4

தானே யருளானான் றானே பொருளானான்
தானேயெல் லாம்வல்ல தானானான் – தானேதான்
நானானா னென்னுடைய நாயகனா னான்ஞான
வானானா னம்பலத்தெம் மான். 5

மான்முதலா யுள்ள வழக்கெல்லாந் தீர்த்தருளித்
தான்முதலா யென்னுளமே சார்ந்தமர்ந்தான் – தேன்முதலாத்
தித்திக்கும் பண்டமெலாஞ் சேர்த்தாங்கென் சிந்தைதனிற்
றித்திக்கு மம்பலத்தான் றேர்ந்து. 6

தேர்ந்தேன் தெளிந்தேன் சிவமே பொருளெனவுள்
ளோர்ந்தே னருளமுத முண்கின்றேன் – சார்ந்தேன்சிற்
றம்பலத்தி லெல்லாம்வல் லானை யவனருளால்
எம்பலத்தெ ல்லாம்வலனா னேன். 7

ஆனே னவனா வவனருளா லாங்காங்கு
நானே களித்து நடிக்கின்றேன் –தானேயென்
தந்தையென் பால்வைத்த தயவைநினைக் குந்தோறுஞ்
சிந்தைவியக் கின்றேன் தெரிந்து. 8

அருளினிப்பாரமடிமைகாரணப்பெற்றா னுண்மை
பொருளினிக்கானொளியைப்புகழ்ந்தவள்பெருமை விரித்தான்
எருதேரானமரும்பியன்றுவிரிஞாற்றிருநெஞ்சினை
அருளோவெனாரிடவல்லோவிரார்
யுகளமுமாத யுமுமாய்காய் முளைத்தவிரின்
முகளருங்கரியுருப்பாரட்டேயிகரான் முகளன்றிய
படப்பிடித்தானொன்றாசையப்படனெலாவிலனே
தெய்யவிக்கையொன்றையைத்தே தேய்த்து

தேய்ப்பாரம்பாதமென்றிடவிடைதிருவடிகளின்
யகைகரானென்றென்றாயெனைப்பணிக்கான்-நிகைகளின்
தூளடியேபிரார்தாதமெனாரு தூதுவரிசிப்பிடிகான்
தின்படியேபாக்கத்தானிரைதேர்

திசைத்தானென்றையர்ச்சுத்திருத்தானெனாவ யு
தசைத்தானெள்பாட்டடைபயிர்தானதுகைதானே
மசையடனாடடைதிரைவதமனாருவையடியேன்
சுருவடியிட்டுப்படியாற்றான்

தானேயதானாறுற்றுனெயோதானாரு ன்
தானேயெல்லாப்பல்லியானாறுற்தானேதான்
தானாறு னெனாறுவையகயடனாறுற்றானா
யானாறு னாப்படவிட்டிகப்பானா-

மானிதமதையானாவதுப்பெல்லைகளிச்சுத்திதில்
கானுரை யானெனாறுனேதானத்தகப்பான்-மேல்புலாந்
திதிதிருப்பானாடமெலாறு தேய்த்தானல்லாவிலை
திப்பாருப்பட்டபடிதான் மேனாத்து

தொப்பத்தெல்லாவிரிதேன்றிவதேயானாறுனா
னேவைத்தினாதானமுதமுன்றிறுனேன்-முனாகினான்றிய
கடியதனிதேலல்லாகடலலானாறுவனாதானால்
எறப்படத்தெல்லாப்பல்லாறு னேன்

ஆறுனாவறுவலவானாதானாலாப்தாவப் ரு
மானேனாதிப்பாதத்தாதின்றுனேன்-தானேயென்
தாப்பையென்பால்பாறுவதாகடியாவதாதிதானாதாவ
திப்பாரவியத்திறுத்திடன்தெரிந்தா

தெரிந்தே னருளாற் சிவமொன்றே யென்று
புரிந்தேன் சிவம்பலிக்கும் பூசை – விரிந்தமனச்
சேட்டையெலாந் தீர்த்துவிட்டேன் சித்தெல்லாம் வல்லவரு
ணாட்டையெலாங் கைக்கொண்டே னான். 9

நான்செய்த நற்றவந்தான் யாதோ நவிற்றரிது
வான்செய்த தேவரெலாம் வந்தேவல் – தான்செய்து
தம்பலமென் றேமதிக்கத் தான்வந்தென் னுட்கலந்தான்
அம்பலவன் றன்னருளி னால். 10

திருச்சிற்றம்பலம்

மூல ஏடு நிறைவு



குறை

தெரிந்தோ தெரியாமலோ நீ செய்த தவறை
புரிந்து இனி நீ வருந்தி என்ன பயன்?
சேர்ந்து வாழ்ந்த நாட்களை நினைத்து
ஒரு முறை என்னை மன்னித்து விடு.

நான் செய்த தவறை சுட்டிக் காட்டி
நான் இல்லை என்று சொல்லி விட்டு
என்னை தனியே தவிக்க விட்டு
நீ மட்டும் தனியே சென்றது ஏன்?



பின் இணைப்புகள் :

அருட்பெருஞ்ஜோதி அட்டகம்

அருட்பெரு வெளியி லருட்பெரு வுலகத் தருட்பெருந் தலத்துமே னிலையில்
அருட்பெரும் பீடத் தருட்பெரு வடிவில் அருட்பெருந் திருவிலே யமர்ந்த
அருட்பெரும் பதியே யருட்பெரு நிதியே அருட்பெருஞ் சித்தியென் னமுதே
அருட்பெருங் களிப்பே யருட்பெருஞ் சுகமே அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 1

குலவுபே ரண்டப் பகுதியோ ரனந்த கோடிகோ டிகளுமாங் காங்கே
நிலவிய பிண்டப் பகுதிகள் முழுதும் நிகழ்ந்தபற் பலபொருள் திரளும்
விலகுறா தகத்தும் புறத்துமே லிடத்தும் மெய்யறி வானந்தம் விளங்க
அலகுறா தொழியா ததுவதில் விளங்கும் அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 2

கண்முதற் பொறியால் மனமுதற்கரணக் கருவினாற் பகுதியின் கருவால்
எண்முதற் புருட தரத்தினாற் பரத்தால் இசைக்குமோர் பரம்பர வுணர்வால்
விண்முதற் பரையால் பராபர வறிவால் விளங்குவ தரிதென வுணர்ந்தோர்
அண்முதற் றடித்துப் படித்திட வோங்கும் அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 3

நசைத்தமே னிலையீ தெனவுணர்ந் தாங்கே நண்ணியுங் கண்ணுறா தந்தோ
திசைத்தமா மறைக ளுயங்கின மயங்கித் திரும்பின வெனிலது னியலை
இசைத்தலெங் ஙனமோ வையகோ சிறிதும் இசைத்திடு வேமென நாவை
அசைத்திடற் கரிதென் றுணர்ந்துளோர் வழுத்தும் அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 4

சுத்தவே தாந்த மவுனமோ வலது சுத்தசித் தாந்த ராசியமோ
நித்தநா தாந்த நிலையனு பவமோ நிகழ்பிற முடிபின்மேல் முடிபோ
புத்தமு தனைய சமரசத் ததுவோ பொருளிய லறிந்தில மெனவே
அத்தகை யுணர்ந்தோ ருரைத்துரைத் தேத்தும் அருட்பெருஞ் ஜோதியென் னாரசே. 5

ஏகமோ வன்றி யனேகமோ வென்றும் இயற்கையோ செயற்கையோ சித்தோ
தேகமோ பொதுவோ சிறப்பதோ பெண்ணோ திகழ்ந்திடு மாணதோ வதுவோ
யோகமோ பிரிவோ வொளியதோ வெளியோ உரைப்பதெற் றோவென வுணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும் அருட்பெருஞ் ஜோதியென் னாரசே. 6

தத்துவ மனைத்துந் தனித்தனி கடந்தேம் தத்துவா தீதமே னிலையில்
சித்தியல் முழுதுந் தெரிந்தன மவைமேற் சிவநிலை தெரிந்திடச் சென்றேம்
ஒத்தவந் நிலைக்கண் யாமுமெம் முணர்வும் ஒருங்குறக் கரைந்துபோ யினமென்
றத்தகை யுணர்ந்தோர் வழுத்தநின் றோங்கும் அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 7

எங்குமாய் விளங்குஞ் சிற்சபை யிடத்தே இதுவது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தைத் தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்த போகபோக் கியனாய்ப் புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த அருட்பெருஞ் ஜோதியென் னரசே. 8

சிவயோக நிலை

மதிமண்ட லத்தமுதம் வாயார வுண்டே
பதிமண்ட லத்தரசு பண்ண – நிதிய
நவநேய மாக்கு நடராஜ னேயெஞ்
சிவனே கதவைத் திற. 1

இந்தா ரருளமுதம் யானருந்தல் வேண்டுமிங்கே
நந்தா மணிவிளக்கே ஞானசபை – எந்தாயே
கோவே யெனது குருவே யெனையாண்ட
தேவே கதவைத் திற. 2

சாகா வருளமுதந் தானருந்தி நான்களிக்க
நாகா திபர்சூழ் நடராஜா – ஏகா
பவனே பரனே பராபரனே யெங்கள்
சிவனே கதவைத் திற. 3

அருளோங்கு தண்ணமுத மன்பா லருந்தி
மருணீங்கி நான்களித்து வாழப் – பொருளாந்
தவநேயர் போற்றும் தயாநிதியே யெங்கள்
சிவனே கதவைத் திற. 4

வானோர்க் கரிதெனவே மாமறைகள் சாற்றுகின்ற
ஞானோ தயவமுத நானருந்த – ஆனாத்
திறப்பா வலர்போற்றுஞ் சிற்றம் பலவா
சிறப்பா கதவைத் திற. 5

எல்லாமும் வல்லசித்தென் றெல்லா மறைகளுஞ்சொல்
நல்லா ரமுதமது நானருந்த – நல்லார்க்கு
நல்வாழ் வளிக்கு நடராயா மன்றோங்கு
செல்வா கதவைத் திற. 6

ஏழ்நிலைக்கு மேற்பா லிருக்கின்ற தண்ணமுதம்
வாழ்நிலைக்க நானுண்டு மாண்புறவே – கேழ்நிலைக்க
ஆவாவென் றென்னையுவந் தாண்டதிரு வம்பல மா
தேவா கதவைத் திற. 7

ஈன வுலகத் திடர்நீங்கி யின்புறவே
ஞான வமுதமது நானருந்த – ஞான
உருவே யுணர்வே யொளியே வெளியே
திருவே கதவைத் திற. 8

திரையோ தசத்தே திகழ்கின்ற வென்றே
வரையோது தண்ணமுதம் வாய்ப்ப – உரையோது
வானேயெம் மானேபெம் மானே மணிமன்றிற்
றேனே கதவைத் திற. 9

ஜோதிமலை மேல்வீட்டிற் றூய திருவமுதம்
மேதினிமே னானுண்ண வேண்டினேன் – ஓதரிய
ஏகா வனேகா வெழிற்பொதுவில் வாழ்ஞான
தேகா கதவைத் திற. 10

அருட்பெருஞ்ஜோதி.

உபதேச உண்மை

நன்னா லுங்கடந்தே – யொளிர் – ஞான சபாபதியே
பொன்னா ருஞ்சபையாய் – அருட் – பூரண புண்ணியனே
என்னா லாவதொன்றும் – உனக் – கில்லை யெனினுமெந்தாய்
உன்னால் வாழுகின்றேன் – எனக் – குண்மை யுரைத்தருளே.

ஆராதனை

ஜோதி

ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாமஜோதி சோமஜோதி வானஜோதி ஞானஜோதி
மாகஜோதி யோகஜோதி வாதஜோதி நாதஜோதி
ஏமஜோதி வியோமஜோதி யேறுஜோதி வீறுஜோதி
ஏகஜோதி யேகஜோதி யேகஜோதி யேகஜோதி

ஆதிநீதி வேதனே ஆடல்நீடு பாதனே
வாதிஞான போதனே வாழ்கவாழ்க நாதனே.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பெற்றே னென்று மிறவாமை பேதந் தவிர்த்தே யிறைவனெனை
உற்றே கலந்தா னானவனை யுற்றே கலந்தே னொன்றானேம்
எற்றே யடியேன் செய்ததவம் யாரே புரிந்தா ரின்னமுதுந்
துய்த்தே யுலகீர் நீவிரெலாம் வாழ்க வாழ்க துனியற்றே !

நிதியே யெனுள்ள நிறைவே பொதுவி னிறைந்தசிவ
பதியே அருட்பெருஞ் ஜோதிய னேயம் பலம்விளங்குங்
கதியே யென்கண்ணுங் கருத்துங் களிக்கக் கலந்துகொண்ட
மதியே அமுதமழை யேநின் பேரருள் வாழியவே !

வாழியெனைத் தூக்கி வைத்த கரதலங்கள்
வாழியெலாம் வல்ல மணிமன்றம் – வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழி நடராஜன்
வாழிசிவ ஞான வழி!

வாழியென் னாண்டவன் வாழியெங் கோனருள் வாய்மையென்றும்
வாழியெம் மான்புகழ் வாழியென் னாதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன் மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழியிவ் வையமும் வானமு மற்றவும் வாழியவே !

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

சுத்த சன்மார்க்க சத்திய சிறுவிண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே!

இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

இப்படிக்
இவண்,